**கவனிக்க**.- 2010.09.24 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1674 - 2010 ඔක්තෝබර් මස 01 වැනි සිකුරාදා - 2010.10.01

1674 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 1472 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1476 |

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந்தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி - அனுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, ஐப்பசி மாதம் 23 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, ஆவணி 31.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | நொச்சியாகம | நொச்சியாகம பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் நுவரகம்பலாத்த பிரிவில் விவாகப் (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், அநுராதபுரம் |

10-16

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010.10.25 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010.09.08.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | பதுளை | தியத்தலாவ ஆதார வைத்தியசாலை பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை |

10-17

---

## சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சு

சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சில் வெற்றிடமாகவுள்ள மகளிர் அபிவிருத்தி அலுவலர் பதவிக்கு தகைமை பெற்ற இலங்கைப் பிரசைகளான பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பொதுவான தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பெண் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பம் கையேற்கும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் (தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று.) ;
(iii) பதவியின் தன்மைக்கமைய மேலே குறிப்பிட்ட வயது வரையறைகளுக்குட்பட்ட பெண்ணாக இருத்தல் வேண்டும் ;
(iv) நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

2. **கல்வித் தகைமைகள்**.- விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பட்டம் பெற்றிருத்தல் வேண்டும் (பட்டத்திற்காக மனோதத்துவம், சமூகவியல், பொருளாதாரம், சட்டம் ஆகிய விடயங்களை கற்றுள்ள பட்டதாரிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.).

3. **சம்பளத் தொகுதியும் சம்பள அளவுத்திட்டமும்**.- எம்என்4-2006ஏ-ரூபா 15,215-10X215-4X240-7X320-15X360-ரூபா 25,965 (பொது நிர்வாக சுற்றறிக்கை 06/2006 (iv)).

4. **ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறை**.- தகைமை உள்ள விண்ணப்பதாரிகள் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் தகைமை உள்ளவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

5. **ஆட்சேர்ப்பு நிபந்தனைகள்**.- (அ) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்கு உரித்துடையதுமாகும். தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் விதவை, தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கு பங்களிப்புத் தொகை செலுத்த வேண்டும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் ஏற்பாடுகளையும் அரச கரும மொழிக் கொள்கையையும் அமுல்படுத்துவதற்காக தற்போது காணப்படுகின்ற மற்றும் எதிர்காலத்தில் ஆக்கப்படுகின்ற சட்டங்கள்,

யாப்புகளுக்கு அமைவாக செயற்பட வேண்டும். அவ்வாறு தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள், திணைக்களக் கட்டளைகள் மற்றும் அரசாங்கத்தினால் தற்போது வெளியிடப்பட்டுள்ள, வெளியிடப்படுகின்ற கட்டளைகளுக்கு உட்படுதல் வேண்டும். தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 தொடக்கம் 12 வரையான பிரிவுகள் ஏற்புடையன.

(இ) தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் கடமையாற்றத் தேவையான உகந்த உடல் ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டுமென்பதுடன் அரசாங்க மருத்துவ பரிசோதனையில் தேர்ச்சியடைதல் வேண்டும்.

(ஈ) பதவிக்கு நியமனம் செய்யப்பட்டு மூன்று ஆண்டுகளுக்குள் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் தேர்ச்சியடைதல் வேண்டும்.

(உ) நியமனம் பெற்ற திகதியில் இருந்து 3 வருட காலம் தகுதிகாண் காலமாகும்.

(ஊ) 2009.02.20 ஆந் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் உட்படுதல் வேண்டும்.

(எ) அரச கருமமொழிக் கொள்கைகளுக்கு அமைய 07/2007 ஆம் இலக்க 2007.05.28 ஆந் திகதிய பொ. நி. சு. மற்றும் 07/2007 (i) ஆம் இலக்க 2007.08.29 ஆந் திகதிய சுற்றறிக்கைக்கு அமைய தாபன விதிக்கோவையின் அத்தியாயம் II இன் 12:11:1 உட்பிரிவிற்கமையவும் 12:11:2 உட்பிரிவுக்கு அமையவும் ஒவ்வொரு அலுவலரும் சேவைக்கு/பதவிக்கு நியமனம் செய்யப்பட்டு ஐந்து வருடங்களுக்குள் குறித்த பதவிக்கு உரிய இரண்டாவது அரச கருமமொழிக்கான நிபுணத்துவத்தை (பதவிக்குரிய மட்டம்) பெற்றுக்கொள்ள வேண்டும்.

(ஏ) உரிய காலப்பகுதிக்குள் நிபுணத்துவம் பெற்றுக்கொள்ளாத அலுவலர்களின் சம்பள ஏற்றம் பிற்போடப்படும்.

(ஐ) யாதாயினும் ஒரு மாவட்டத்திற்கு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் ஆகக்குறைந்தது 3 வருடங்களுக்கு அந்த மாவட்டத்தில் சேவையாற்ற வேண்டும்.

6. **விண்ணப்பிக்க வேண்டிய முறை.**- (அ) இந்த அறிவித்தலின் மாதிரி படிவத்திற்கு அமைய ஏ4 அளவிலான தாளில் இரண்டு பகுதியையும் பயன்படுத்தி தயார்செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2010.10.18 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சு, இல. 175ஏ, நாவலை வீதி, நுகேகொடை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் விண்ணப்பங்கள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மகளிர் அபிவிருத்தி அலுவலர் பதவிக்கான விண்ணப்பம் - 2010" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

(இ) சகல வகையிலும் பூர்த்திசெய்யப்படாத, அடிப்படை தகைமைகள் இல்லாத மற்றும் உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் விண்ணப்பப்படிவம் கிடைத்ததாகவோ அல்லது நிராகரிக்கப்பட்டதாகவோ அறிவிக்கப்பட மாட்டாது.

(ஈ) தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்களில் 53 வெற்றிடங்களுக்கு மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்ய அங்கீகாரம் கிடைத்துள்ளதனால் கீழே உள்ள புள்ளி வழங்கும் அடிப்படையைக் கவனத்தில் கொண்டு விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் உச்ச புள்ளிகளின் முன்னுரிமையின் அடிப்படையில் நியமனம் செய்யப்படுவார்கள்.

**நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கும் திட்டம்** :

| | விபரம் | உச்ச புள்ளிகளின் எண்ணிக்கை | மொத்த புள்ளிகள் |
|---|---|---|---|
| (1) | கல்வித் தகைமைகள் :<br>(i) பட்டத்திற்கு சிபாரிசு செய்யப்பட்ட பாடங்களைக் கற்றிருத்தல் | 15 | |
| | (ii) வேறு கல்வித் தகைமைகளுக்கு (பட்டப்பின் படிப்பு/ பட்டப்பின் டிப்ளோமா/ டிப்ளோமா/சான்றிதழ்) | 10 | 25 |
| (2) | வேறு தகைமைகள் :<br>(i) மகளிர் அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய அனுபவம் | 10 | |
| | (ii) மேலதிக தகைமைகள்/ திறமைகள் | 05 | 15 |
| (3) | ஆளுமை | 10 | 10 |
| | மொத்தப் புள்ளி | 50 | |

7. **தவறான தகவல்களை வழங்குதல்.**- யாராயினும் அபேட்சகர் ஒருவர், தகைமை இல்லை என்பது நியமனம் வழங்க முன்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் தெரியவரும் பட்சத்தில் அவரின் அபேட்சகர் தன்மை இரத்துச்செய்யப்படும். நியமனம் பெற்ற பின்னர் இதுபற்றி அறிந்துகொண்டு தவறான தகவல்களை சமர்ப்பித்திருப்பதாக அல்லது உண்மையான தகவல்களை வேண்டுமென்றே மறைத்திருப்பதாக தெரியவரும் பட்சத்தில் பதவி நீக்கம் செய்யப்படுவார்.

8. விண்ணப்பம் கோரும் அறிவித்தல் சம்பந்தமான விடயங்கள் அல்லது இந்த அறிவித்தலில் வெளிப்படுத்தப்படாத வேறு விடயங்கள் தொடர்பில் எழும் சிக்கல்கள் சம்பந்தமாக சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சின் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

நாமனி குணசேகர,
செயலாளர்.

சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சு,
இல. 175ஏ, நாவலை வீதி,
நுகேகொடை.

| அலுவலக உபயோகத்திற்கு |
|---|
| |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சு**

*மகளிர் அபிவிருத்தி அலுவலர் பதவி*

1. (அ) விண்ணப்பதாரியின் பெயர், முதலெழுத்துக்களுடன் (சிங்களம்/தமிழ்) :----.
விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

(ஆ) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :----.
விண்ணப்பதாரியின் முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2. நிரந்தர முகவரி :----.
3. தற்போது வசிக்கும் முகவரி :----.
4. நிரந்தர வசிப்பிட மாவட்டம் :----.
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. விண்ணப்பிக்கும் மாவட்டம் :

(1) ----.
(2) ----.
(3) ----.

பிரதேச செயலகப் பிரிவு :

(1) ----.
(2) ----.
(3) ----.

7. பால் :----.
8. பிறந்த திகதி :
ஆண்டு ----, மாதம் ----, திகதி ----.
9. இனம் :----.
10. திருமணமானவரா /திருமணமாகாதவரா ? :----.
11. பெற்றுள்ள பட்டத்தின் விபரம் :-

(i) பல்கலைக்கழகம் :----.
(ii) பட்டம் வழங்கிய திகதி :----.
(iii) பெற்றுள்ள பட்டம் :----.
(iv) வகுப்பு :----.
(v) ஊடகமொழி :----.

12. சம்பந்தப்பட்ட வேறு கல்வித் தகைமைகள் இருப்பின் (பட்டப்பின் படிப்பு/டிப்ளோமா) :

(i) ----.
(ii) ----.
(iii) ----.

13. மொழித்திறமை (ஏற்புடைய நிரலில் ✓ அடையாளமிடுக.)

| | மிக நன்று | நன்று | சாதாரணம் | பலவீனம் |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

14. வேறு தொழில்சார் அனுபவங்கள் இருப்பின் (மகளிர் அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி, தொண்டர் அமைப்புகளில் சேவையாற்றியமை) :----.

**விண்ணப்பதாரரின் உறுதியுரை**

................ ஆகிய நான் மேலே குறிப்பிட்டுள்ள சகல விடயங்களும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதிமொழிகின்றேன். நான் அரசாங்க சேவையில் இருந்து பதவி நீக்கம் செய்யப்படவோ அல்லது அனுதாப மாற்றீடாக வினைத்திறன் இன்மையின் அடிப்படையில் சேவையிலிருந்து ஓய்வுறுத்தப்படவோ இல்லை என்றும் பதவி வறிதாக்கியவராக கருதப்படவில்லை என்றும் உறுதி செய்கின்றேன். இங்கு உள்ளடங்கும் விடயங்களில் ஏதேனும் உண்மைக்கு மாறானவை அல்லது பிழையானவை என்பது நான் தெரிவுசெய்யப்படுமுன்னர் தெரியவரும் பட்சத்தில் தகைமையற்றவராக்கப்படுவதற்கு உட்படுவதையும் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அவ்வாறான நிலைமை வெளிப்படுத்தப்படுமாயின் எவ்வித நட்டஈடும் செலுத்தாது பதவியில் இருந்து நீக்கப்பட முடியும் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கான திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திருமதி/செல்வி ............................................. தற்போது இந்த அமைச்சில்/திணைக்களத்தில் ................................. ஆக நிரந்தர/தற்காலிக/அமைய அலுவலராக சேவையாற்றுகின்றார் என்பதையும் இந்தப் பதவிக்கு தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவி :----.
பெயர் :----.
அமைச்சு/திணைக்களம் :----.
திகதி :----.

**மகளிர் அபிவிருத்தி அலுவலர் பதவிக்கான வெற்றிடம் காணப்படுகின்ற பிரதேச செயலகங்கள்**

| மாவட்டம் | வெற்றிடம் காணப்படுகின்ற பிரதேச செயலகம் |
|---|---|
| 1. கொழும்பு | பாதுக்கை |
| 2. களுத்துறை | வலல்லாவிட்ட |
| 3. காலி | நியாகம |
| 4. | அக்மீமன |
| 5. மாத்தறை | பிட்டபெத்தர |

| | மாவட்டம் | வெற்றிடம் காணப்படுகின்ற பிரதேச செயலகம் |
|---|---|---|
| 6. | அம்பாந்தோட்டை | திஸ்ஸமஹாராமை |
| 7. | கண்டி | தெல்தொட்ட |
| 8. | | மினிபே |
| 9. | | உடுதும்பற |
| 10. | மாத்தளை | வில்கமுவ |
| 11. | | ரத்தோட்டை |
| 12. | | லக்கல பல்லேகம |
| 13. | | கலேவல |
| 14. | நுவரெலியா | வலப்பனை |
| 15. | | கொத்மலை |
| 16. | இரத்தினபுரி | அயகம |
| 17. | | கிரியல்ல |
| 18. | | கொலன்ன |
| 19. | | ஓபநாயக்க |
| 20. | | வெலிகபொல |
| 21. | பதுளை | லுனுகல |
| 22. | | கந்தகெட்டிய |
| 23. | | மஹியங்கனை |
| 24. | அநுராதபுரம் | பதவிய |
| 25. | | வெலிஓயா |
| 26. | | ஹொரவப்பொத்தானை |
| 27. | பொலன்னறுவை | ஹிங்குராக்கொடை |
| 28. | புத்தளம் | கறுவளகஸ்வெவ |
| 29. | | கல்பிட்டி |
| 30. | | மஹாகும்புக்கடவெல |
| 31. | யாழ்ப்பாணம் | நெடுந்தீவு |
| 32. | | காரைநகர் |
| 33. | | ஊர்காவற்றுறை |
| 34. | | வேலணை |
| 35. | | வடமாராட்சி கிழக்கு |
| 36. | | வலிகாமம் மேற்கு (சங்கானை) |
| 37. | கிளிநொச்சி | கரைச்சி |
| 38. | | கந்தாவளை |
| 39. | | பூநகரி |
| 40. | | பச்சிளைப்பள்ளி |
| 41. | மன்னார் | மன்னார் நகர் |
| 42. | | மாந்தை மேற்கு |
| 43. | | முசலி |
| 44. | | மடு |
| 45. | | நானாட்டான் |
| 46. | முல்லைத்தீவு | கரைதுரைப்பற்று |
| 47. | | மாந்தை கிழக்கு |
| 48. | | ஒட்டுசுட்டான் |
| 49. | | புதுக்குடியிருப்பு |
| 50. | | துணுக்காய் |
| 51. | வவுனியா | வவுனியா வடக்கு |
| 52. | | வெங்கலசெட்டிக்குளம் |
| 53. | | வவுனியா தெற்கு |
| 54. | அம்பாறை | அக்கரைப்பற்று |
| 55. | | ஆலையடிவேம்பு |
| 56. | | இறக்காமம் |
| 57. | | காரைதீவு |
| 58. | | லாகுகெல |
| 59. | | மகஓயா |
| 60. | | நாவிதன்வெளி |
| 61. | | பொத்துவில் |
| 62. | | சாய்ந்தமருது |
| 63. | | திருக்கோவில் |
| 64. | | பதியத்தலாவ |
| 65. | | கல்முனை தமிழ் |
| 66. | மட்டக்களப்பு | ஏறாவூர்ப்பற்று |
| 67. | | கோறளைப்பற்று (வாழைச்சேனை) |
| 68. | | கோறளைப்பற்று வடக்கு |
| 69. | | காத்தான்குடி |
| 70. | | மண்முனை தென்மேற்கு |
| 71. | | மண்முனை மேற்கு |
| 72. | | மண்முனை வடக்கு |
| 73. | | மண்முனை தெற்கு (களுவாஞ்சிக்குடி) |
| 74. | | கோறளைப்பற்று தெற்கு |
| 75. | | கோறளைப்பற்று மத்தி |
| 76. | திருகோணமலை | கோமரன்கடவெல |
| 77. | | குச்சவெளி |
| 78. | | கந்தளாய் |
| 79. | | மூதூர் |
| 80. | | மொறவெவ |
| 81. | | சேருவில |
| 82. | | வெருகல் |

10-43

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

இஸ்லாமிய தீனியாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ் பரீட்சை - 2010

**ஒழுங்கு விதிகளும் பிரமாணங்களும் :**

1. மேற்படி பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். 2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தில் நடாத்தப்படும். பரீட்சைக்கான பாடங்களும், பாடத்திட்டங்களும் இணைப்பு 02 இல் தரப்பட்டுள்ளன.

2. **பரீட்சை நிலையங்கள்**.- பரீட்சை நிலையங்கள் இவ்வறிவித்தலின் பின்னிணைப்பு 01 இல் கூறப்பட்டுள்ள நகரங்களில், ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து நிறுவப்படும். குறித்த நிலையத்திற்குப் போதிய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதவிடத்து அந்நிலையம் இரத்துச் செய்யப்பட்டு அதற்குரிய பரீட்சார்த்திகள் அண்மிய பரீட்சை நிலையத்துடன் இணைக்கப்படுவர்.

3. **ஊடக மொழி**.- இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். எனினும் ஒரு பரீட்சார்த்தி, தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் இவற்றுள் யாதேனும் ஒரு மொழி மூலம் மட்டுமே தோற்ற முடியும்.

4. **தகைமைகள்**.- இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஏதேனுமொன்றை 2007 ஆம் ஆண்டிலோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

4.1 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் இஸ்லாமிய சன்மார்க்க (அஹதிய்யா/அல்குர்ஆன் பாடசாலை) இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெற்றிருத்தல்.

4.2 முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள அரபு கலாசாலைகளினால் வழங்கப்படும் மௌலவிச் சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் அல் ஆலிம் சான்றிதழ் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

4.3 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் இஸ்லாம் அல்லது இஸ்லாமிய நாகரிகம் ஆகிய இரு பாடங்களில் ஒரு பாடம் உட்பட 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

4.4 இஸ்லாம் பாடத்தில் திறமைச் சித்தியுடன் க. பொ. த. (சாதாரண தர) ப் பரீட்சையில் சித்தி பெற்றும், குறைந்தது இரண்டு வருடங்கள் அஹதிய்யாப் பாடசாலை அல்லது அறபுக்கல்லூரி ஆசிரியராகச் சேவையாற்றியுமிருத்தல்.

**குறிப்பு**.- **(1)** இப்பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்ப தாரியும் மேலே 4 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளாரென முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத் தினால் அங்கீகரிக்கப்பட்ட அஹதிய்யாப் பாடசாலையின் அதிபர் அல்லது சிரேஷ்ட அல்குர்ஆன் மத்ரஸா அதிபர் அல்லது அறபுக் கல்லூரி அதிபரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**(2)** பரீட்சார்த்தி ஒருவர் இப்பரீட்சைக்குப் பதிவு செய்யப்பட்ட அஹதிய்யா பாடசாலை அல்லது சிரேஷ்ட அல்குர்ஆன் மத்ரஸா அல்லது அறபுக் கல்லூரி அதிபர் மூலமே விண்ணப்பிக்க முடியும்.

5. பதிவு செய்யப்பட்ட சகல அஹதிய்யாப் பாடசாலைகள், அரபுக் கல்லூரிகள் என்பவற்றிற்கு விண்ணப்பப்படிவங்களும் அறிவுறுத்தல் களும் தபால்மூலம் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பப்படிவங்களும் அறிவுறுத்தல்களும் கிடைக்கப் பெறாத நிறுவகங்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு ''பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'' என்ற முகவரிக்கு 2010.10.25 ஆந் திகதிக்கு முன்பதாக கடிதமொன்றை அனுப்புவதனூடாக குறித்த விண்ணப்பப்படிவங் களையும் அறிவுறுத்தல்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

5.1 விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியினைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவ தோடு, மற்றைய பிரதியினைக் குறிப்பிட்ட நிறுவகத்தில் கோவைப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

5.2 விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2010.10.29 ஆந் திகதி ஆகும்.

5.3 விண்ணப்பப்படிவங்கள் தெளிவாகவும் பிழைகளின்றியும் பூரணப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப் படாத விண்ணப்பப்படிவங்களும், இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

5.4 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் :-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.
(விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது.)

5.5 விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இஸ்லாமிய தீனியாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ்ப் பரீட்சை - 2010'' எனவும், விண்ணப்பிக்கும் பரீட்சை நகரமும் குறிப்பிடப்படல் வேண்டும்.

5.6 விண்ணப்பங்களோடு எவ்வித சான்றிதழ்களையும் இணைத்து அனுப்பக்கூடாது. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதிகளை குறித்த விண்ணப்பதாரி கொண்டுள்ளாரென அஹதிய்யாப் பாடசாலை அல்லது சிரேஷ்ட அல்குர்ஆன் மத்ரஸா அல்லது அறபுக் கல்லூரி அதிபரினால் உறுதிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

6. முதன்முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட் சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. ஏனையோர் பரீட்சைக் கட்டணமாக ரூபா 150 செலுத்த வேண்டும். நூனசித்தி பெற்று தனி ஒரு பாடத்திற்கு மட்டும் விண்ணப்பிப்போர் அப்பாடத்திற்காக ரூபா 40 செலுத்த வேண்டும்.

6.1 கட்டணம் செலுத்தும் முறை.- உரிய தொகையை இலங்கை பரீட்சைத் திணைக்கள வருமானத் தலைப்பு 2003-20-13 இன் கீழ் வரவு வைப்பதற்காக அஞ்சல் அலுவலகத்தில் பணம் செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை விண்ணப்பம் சமர்ப்பிக்கும் நிறுவனத்தலைவர்கள் தம்மிடம் வைத்துக் கொள்வது உசிதமாகும்.)

7. **அனுமதி அட்டைகள்**.- பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் உரிய அஹதிய்யாப் பாடசாலை அதிபர் அல்லது அறபுக் கல்லூரி அதிபர் மூலமாக விநியோகிக்கப்படும் :-

7.1 ஏதாவதொரு பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சை ஆரம்ப தினத்திலேயே அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலல்லாது வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்ற எத்தனிக்கும் பட்சத்தில் உரிய பரீட்சார்த்தியின் பரீட்சைக்குத் தோற்றும் தகைமை இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையிலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பம் அஹதிய்யாப் பாடசாலை அல்லது சிரேஷ்ட அல்குர்ஆன் மத்ரஸா அல்லது அறபுக் கல்லூரி அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

*8.* ***ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்.-*** *சகல பரீட்சார்த்திகளும் தாம் பரீட்சைக்குத்தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறு தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்குக் கீழ்வரும் ஆவணங்களுள் ஒன்று ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும் :-*

*(அ) தேசிய அடையாள அட்டை ;*

*(ஆ) செல்லுபடியாகும் பிரயாணக் கடவுச் சீட்டு* (Passport).

*9.* ***பரீட்சை முடிவுகளை வெளியிடலும் சித்திபெற்றமையைத் தீர்மானித்தலும்.-*** *இப்பரீட்சைக்குரிய ஐந்து பாடங்களிலும் தேறியவர்கள் சித்தியடைந்தவராகக் கருதப்படுவார்கள். இவர்களுக்கு இஸ்லாமிய தீனியாத் தர்மாச்சார்யர்களுக்கான சான்றிதழ் வழங்கப்படும். ஏதாவது ஒரு பாடத்திற்கு மாத்திரம் 25 புள்ளிகளுக்குக் குறையாமல் பெற்று, ஏனைய நான்கு பாடங்களிலும் சித்திபெற்ற பரீட்சார்த்தி நூனசித்தி* (Referred) *பெற்றவராகக் கருதப்படுவார். நூனசித்தி பெற்ற பரீட்சார்த்தி அடுத்துவரும் முதலாவது பரீட்சையில் நூன சித்திப் பாடத்திற்குத் தோற்றி சித்தி பெற்றால், மேற்படி சான்றிதழைப் பெற உரித்துடையவராவார். இவ்விதம் நூன சித்தி பெற்ற பாடத்திற்கு விண்ணப்பிக்கும்போது ஏனைய பாடங்களில் சித்தி பெற்ற பரீட்சை வருடத்தையும், தமது சுட்டெண்ணையும், பெற்ற பெறுபேற்றையும் அறவித்தல் வேண்டும்.*

*10.* ***பரீட்சை பற்றிய விபரம்.-*** *இப்பரீட்சை ஐந்து வினாப் பத்திரங்களைக் கொண்டிருக்கும் ஒவ்வொரு வினாப்பத்திரமும் 3 மணித்தியாலங்களுக்குரியதாகும். அவ் ஐந்து வினாப்பத்திரங்களும் வருமாறு :-*

*(1) இஸ்லாமிய கோட்பாடும் சட்ட மூலாதாரங்களும் (அகீதாவும் மஸாதிருஷ் ஷரீஆவும்)*
*(2) இஸ்லாமிய சட்டநெறி (அல் பிக்ஹுல் இஸ்லாமி)*
*(3) ஸீராவும் இஸ்லாமிய வரலாறும் (அஸ்ஸீரா வத்தாரீகுல் இஸ்லாமி)*
*(4) சமூகவியலும் ஒழுக்கவியலும் (அல் அக்லாக் வஸ் ஸுலூக்)*
*(5) இஸ்லாமிய இலக்கியமும் அறபு மொழியும் (அல் லுகதுல் அரபிய்யா வல் அதபுல் இஸ்லாமி)*

*ஒவ்வொரு பாடத்துக்குமான பாடவுள்ளடக்கம் இவ்வறிவித்தலின் பின்னிணைப்பு 2 இல் தரப்பட்டுள்ளது.*

*11.* ***வினாப்பத்திர அமைப்பு.-*** *ஒவ்வொரு வினாப்பத்திரமும்* I, II, III *ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டதாக அமையும்.*

- *பகுதி* I *இல், சுருக்கமாக விடையளிக்க வேண்டிய 10 வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் 04 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். (04 புள்ளிகள்)*
  *உம் : அன்றாட செயற்பாடொன்றை நீர் எவ்வாறு இபாதத் ஆக மாற்றிக்கொள்வீர் ?*
  (10 x 4 = 40)
- *பகுதி* II *இல் கட்டமைப்பு வினாக்கள் 05 வழங்கப்படும். அவற்றுள் விரும்பிய 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் 12 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.*
  (12 x 4 = 48)
- *பகுதி* III *இல் கட்டுரை அமைப்பு வினாக்கள் 02 இடம்பெறும். அவற்றுள் விரும்பிய ஒரு வினாவைத் தெரிவு செய்து விடையளிக்க வேண்டும். அதற்கு 12 புள்ளிகள் வழங்கப்படும்.*
  (12 x 1 = 12)

***சித்தி பெறுவதை தீர்மானிக்கும் நியதிகள்.-***

- *ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான மொத்தப் புள்ளிகள் 100*
- *சித்தியடைவதற்குரிய குறைந்தபட்ச புள்ளி 40*

| | | |
|---|---|---|
| *(அ)* | *00 – 24 புள்ளிகள் வரை* | F |
| *(ஆ)* | *25 – 39 புள்ளிகள் வரை* | W |
| *(இ)* | *40 – 54 புள்ளிகள் வரை* | S |
| *(ஈ)* | *55 – 64 புள்ளிகள் வரை* | C |
| *(உ)* | *65 – 74 புள்ளிகள் வரை* | B |
| *(ஊ)* | *75 – 100 புள்ளிகள் வரை* | A |

*13.* ***விடைத்தாள் மீள்பரிசீலனை.-*** *பரீட்சை முடிவுகள் வெளியாகி 30 நாட்களுக்குள், இத்திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் படிவங்கள் மூலம் குறிப்பிட்ட நிறுவனத்தின் அதிபர் மூலம் விண்ணப்பம் செய்தால் விடைத்தாள்களை மீள்பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். எனினும் இதற்குரிய கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். பரீட்சை முடிவுகளில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் மாத்திரமே கட்டணம் மீளளிக்கப்படும். எக்காரணம் கொண்டும் விண்ணப்பதாரிக்கோ அல்லது அவரது பிரதிநிதிக்கோ விடைப்பத்திரங்களைப் பார்வையிடுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.*

*14. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகள், அறிவுறுத்தல் களுக்கமைய நடந்து கொள்வதற்கு எல்லா விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டுள்ளதோடு, இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபுக்கேற்ப தீர்மானிக்கப்படும்.*

*அநுர எதிரிசிங்ஹ,*
*பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.*

*பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,*
*ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,*
*இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2010, செத்தெம்பர் 16.*

***பின்னிணைப்பு 01***
***பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் நகரங்கள்***

| *மாவட்ட இல.* | *நகர இல.* |
|---|---|
| *01. கொழும்பு மாவட்டம் :* | |
| *கொழும்பு மத்தி* | *01* |
| *பம்பலப்பிட்டி* | *02* |
| *02. கம்பஹா மாவட்டம் :* | |
| *திஹாரிய* | *03* |
| *மாபோலை* | *04* |
| *நீர்கொழும்பு* | *05* |
| *03. களுத்துறை மாவட்டம் :* | |
| *களுத்துறை* | *06* |
| *அளுத்கமை* | *07* |
| *04. காலி மாவட்டம் :* | |
| *காலி* | *08* |
| *05. மாத்தறை மாவட்டம் :* | |
| *மாத்தறை* | *09* |

06. ஹம்பாந்தோட்டை மாவட்டம் :
ஹம்பாந்தோட்டை 10

07. கேகாலை மாவட்டம் :
வரகபொலை 11
மாவனல்லை 12

08. குருநாகலை மாவட்டம் :
குளியாபிட்டி 13
குருநாகல் 14
கல்கமுவை 15

09. புத்தளம் மாவட்டம் :
சிலாபம் 16
புத்தளம் 17
கற்பிட்டி 18

10. அநுராதபுரம் மாவட்டம் :
அநுராதபுரம் 19
கெகிராவை 20
கலன்பின்துனுவெவை 21

11. பொலன்னறுவை மாவட்டம் :
கதுருவெலை 22

12. மாத்தளை மாவட்டம் :
மாத்தளை 23

13. கண்டி மாவட்டம் :
கண்டி 24
நாவலப்பிட்டி 25
அக்குரணை 26

14. நுவரெலியா மாவட்டம் :
நுவரெலியா 27

15. இரத்தினபுரி மாவட்டம் :
பலாங்கொடை 28

16. பதுளை மாவட்டம் :
பதுளை 29
வெலிமடை 30

17. மொனராகல மாவட்டம் :
பிபிலை 31

18. அம்பாறை மாவட்டம் :
சம்மாந்துறை 32
கல்முனை 33
அக்கரைப்பற்று 34

19. மட்டக்களப்பு மாவட்டம் :
காத்தான்குடி 35
ஏறாவூர் 36
வாழைச்சேனை 37

20. திருகோணமலை மாவட்டம் :
திருகோணமலை 38
மூதூர் 39
கிண்ணியா 40

21. வவுனியா மாவட்டம் :
வவுனியா 41

22. மன்னார் மாவட்டம் :
மன்னார் 42

23. முல்லைத்தீவு மாவட்டம் :
முல்லைத்தீவு 43

24. கிளிநொச்சி மாவட்டம் :
கிளிநொச்சி 44

25. யாழ்ப்பாண மாவட்டம் :
யாழ்ப்பாணம் 45

## பின்னிணைப்பு - 02

### 01. அகீதாவும் மஸாதிருஷ் ஷரீஆவும்

**1.1 இஸ்லாமிய அகீதா**

1.1.1 இஸ்லாமிய அகீதா பற்றிய அறிமுகமும் பொது விளக்கமும்

1.1.2 இஸ்லாமிய அகீதாவின் உள்ளடக்கம்

1.1.2.1 தவ்ஹீத்
- அல் உலூஹிய்யா
- அர்-ருபூபிய்யா
- அஸ்மாஉல் ஹுஸ்னாவுக்கூடாக இறை பண்புகளை விளங்கல்

1.1.2.2 நூஹானிய்யாத்

1.1.2.3 நுபுவ்வாத்

1.1.2.4 ஸம்இய்யாத்

1.1.2.5 கழா கத்ர்

1.1.3 அகீதா சார்ந்த பிரிவுகள்

**1.2 மஸாதிருஷ் ஷரீஆ**

1.2.1 மஸாதிருந் நக்லிய்யா - அறிமுகம்

1.2.2 வஹி
- வஹியின் அவசியம்
- வஹியின் வகைகள்

1.2.3 அல்குர்ஆன்

1.2.3.1 அருளப்படலும் தொகுக்கப்படலும்
- தர்தீப் நுஸூல் தர்தீப் திலாவத்

1.2.3.2 அமைப்பு
- மக்கி - மதனீ
- நாஸிக் மன்ஸூக்
- முஹ்கம் - முதஷாபிஹ்
- அஸ்பாபுந் நுஸூல்

1.2.3.3 இஃஜாஸுல் குர்ஆன்
- மொழி ரீதியானவை
- சட்டம் தொடர்பானவை
- அறிவியல் சார்ந்தவை

1.2.3.4 தப்ஸீர் கலை
- தோற்றமும் வளர்ச்சியும்
- தப்ஸீர்கள் (மன்கூல், மஃகூல், நவீன தப்ஸீர்கள்)

1.2.3.5 அல்குர்ஆனுடன் தொடர்பு
- அல்குர்ஆனை அணுகும் முறை
- அல்குர்ஆனின் இலக்குகள்
- அல்குர்ஆனைக் கற்கும் முறை

1.2.4 அஸ்ஸுன்னா
1.2.4.1 பத விளக்கமும் பிரயோக விளக்கமும்
1.2.4.2 சட்டவாக்க மூலாதாரம் என்ற வகையில் ஸுன்னா
1.2.4.3 ஹதீஸ் பாதுகாக்கப்படல்
- நபி (ஸல்) அவர்களின் காலம்
- ஸஹபாக்களின் காலம்
- தாபிஈன்கள் காலம்
- தபஉத் தாபிஈன்கள் காலம்
- நவீன காலம்
1.2.4.4 ஹதீஸை அடியொட்டி எழுந்த கலைகளும், விளைவுகளும்
- அஸ்மாஉர் ரிஜால்
- இல்முல் ஜரஹ் வத் தஃதீல்
- உஸூலுல் ஹதீஸ்
1.2.4.5 ஹதீஸை விளங்குதல்
- ஹதீஸ் முழு வாழ்க்கைக்குமான வழிகாட்டி
- ஹதீஸ் தொகுப்புகள்
1.2.4.6 ஹதீஸை அணுகுதல்
- பல்வேறு துறைசார் ஹதீஸ்களை விளங்குதல் (சூழல் பாதுகாப்பு, சுகாதாரம், பொருளாதாரம், அறிவியல்)
1.2.5 துணை மூலதாரங்கள்
1.2.5.1 இஜ்திஹாத்
- பதவிளக்கமும் பிரயோக விளக்கமும்
- அதன் அவசியம்
- சட்ட சிந்தனைப் பிரிவுகள் (மத்ரஸதுல் அஸர், மத்ரஸதுல் ரஉயு)
1.2.5.2 முஜ்தஹித்கள்
- தகைமைகளும் வகைகளும்
- அவர்களின் பங்களிப்புகள்
- மத்ஹபுகளின் தோற்றமும் வளர்ச்சியும்
1.2.5.3 துணை மூலாதாரங்கள்
- பொறிமுறையும் பயன்பாடும்
இஜ்மா, கியாஸ், மஸ்லஹா முர்ஸலா, உர்ப், ஷரஉ ஸாபிகா, இஸ்திஹ்ஸான், இஸ்திஸ் ஹாப், கவ்லுஸ்ஸஹாபா, ஸத்துஸ் ஸராஇ

## 2.0 அல் பிக்ஹுல் இஸ்லாமி

### 2.1 இபாதத்
2.1.1 தஹாரத் : நஜீஸ் பற்றிய விளக்கம்
- விதிமுறைகளும் சட்டதிட்டங்களும்
2.1.2 இபாதத்
- பதவிளக்கமும், பிரயோகமும்
- இபாதத் வகைளும், அவற்றின் தத்துவங்களும்
- ஈமானுக்கும் இபாதத்துக்கும் இடையிலான தொடர்பு

### 2.2 அடிப்படை இபாதத்துகள்
2.2.1 தொழுகை
- முக்கியத்துவம்
- வகைகள்
- விதிமுறைகள்
- பயன்கள்
2.2.2 ஸகாத்
- முக்கியத்துவம், விதிமுறைகள்
- பயன்கள்
- ஸகாத்தை நிறுவனமயப்படுத்தலின் அவசியம்
- ஸகாதுல் பித்ர்
2.2.3 நோன்பு
- முக்கியத்துவம், வகைகள்
- விதிமுறைகள்
- பயன்கள்
2.2.4 அல் ஹஜ்
- முக்கியத்துவம்
- விதிமுறைகள்
- பயன்கள்
2.2.5 உபரி வணக்கங்கள்
- ஸதகா, உம்றா
- திலாவதுல் குர்ஆன், தவ்பா-இஸ்திஃபார், திக்ர்- அவ்ராத், துஆ
- கவ்ப், ரஜா, ரிழா, தவக்குல், வரஉ, ஸுஹ்த்
- ஸியாரதுல் குபூர், குர்பானிகள்

### 2.3 முஆமலாத்
2.3.1 இஸ்லாமிய பொருளாதாரம்
- அறிமுகம்
- சிறப்பியல்புகள்
2.3.2 பொருளீட்டலும் செலவிடலும்
- உழைப்பின் முக்கியத்துவம்
- விவசாயம் (முஸாரஆ, இஹ்யாஉல் மமாத்)
- கைத்தொழில்
2.3.3 வியாபாரம்
- முக்கியத்துவம்
- இஸ்லாம் அனுமதித்த வியாபார முறைகள் (ஸம்ஸரா, பைஉத் தக்ஸீத், முழாரபா, முஷாரகா, முராபஹா, இஜாரா, ரஹ்ன்)
- நவீன வியாபார முறைமைகள் (ஏனைய வியாபார முறைகளுடன் ஒப்புநோக்கல், உ-ம் : வங்கி, காப்புறுதி)
2.3.4 இஸ்லாத்தில் ஹராமாக்கப்பட்டுள்ள தொழில்சார் நடவடிக்கைகள்
- கலப்படம், பதுக்கல், ஏமாற்றல்
- லஞ்சம், சூது, வட்டி
- ஹராமான பொருட்களின் விற்பனை

### 2.4 முனாகஹாத்
2.4.1 நிகாஹ்
- நிகாஹ் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம்
- நிகாஹ் - சட்ட விதிகள்
- பலதார மணம்
2.4.2 குடும்பம்
- குடும்ப வாழ்வின் முக்கியத்துவம்
- கணவன்-மனைவி உறவு
- கடமைகளும் உரிமைகளும்
- குழந்தை வளர்ப்பு தொடர்பான போதனைகளும், வழிகாட்டல்களும்
- பெற்றோர்-பிள்ளை கடமைகளும் உரிமைகளும்
- வாரிசுரிமை
2.4.3 விவாகரத்து
- விவாகரத்து பற்றிய இஸ்லாமிய நோக்கு
- வகைகளும் விதிமுறைகளும்
- இத்தா-விளக்கம், விதிகள், தாபரிப்பு

2.5 **ஜினாயாத்**
2.5.1 ஜினாயாத் - அறிமுகம்
2.5.2 குற்றங்கள்
- வகைகள்
- குற்றப் பரிகாரம்
2.5.3 தண்டனைகள்
- தண்டனை பற்றிய இஸ்லாமிய நோக்கு
- ஹுதூத், கிஸாஸ், தஃஸீர்
- கப்பாரா, பித்யா

03. **ஸீராவும் இஸ்லாமிய வரலாறும்**

3.1 **வரலாறு பற்றிய இஸ்லாமிய நோக்கு**
- இஸ்லாமிய வரலாற்றின் தனித்துவமான பண்புகள்
3.2 **வரலாற்றுக் கட்டங்கள்**
3.2.1 நபி (ஸல்) அவர்களின் காலம்
- நபி (ஸல்) அவர்களுக்கு முற்பட்ட உலகம்
- நபி (ஸல்) அவர்களின் மக்கா வாழ்க்கைப் பகுதி
- நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்க்கைப் பகுதி
3.2.2 குலபாஉர் ராஷிதீன்களின் காலம்
- கலீபாக்களின் தெரிவுமுறை
- இராச்சியப் பரம்பல் - காரணமும் முறையும்
- நிருவாக, நிதி, நீதி அமைப்புக்கள்
- எதிர்நோக்கிய சவால்கள்
- கலீபாக்களின் ஆளுமைப் பண்புகளும், முன்மாதிரிகளும்
3.2.3 பிற்பட்ட கலீபாக்களின் காலம்
3.2.3.1 உமையா காலம்
- உமையாக்களின் எழுச்சி
- பிரதான கலீபாக்கள் - ஆளுமைப் பண்புகளும், பங்களிப்புக்களும் (முஆவியா, அப்துல் மலிக், வலீத், உமர் இப்னு அப்துல் அஸீஸ்)
- இராச்சியப் பரம்பலும், விளைவுகளும்
- எதிர்நோக்கிய பிரச்சினைகள்
3.2.3.2 அப்பாஸியர் காலம்
- அப்பாஸியர் எழுச்சி
- பிரதான கலீபாக்களும் அவர்களின் பங்களிப்புக்களும் (மன்ஸூர், ஹாரூன், மாமூன்)
- பிற்பட்ட கலீபாக்களின் ஆட்சியை குலபாஉர் ராஷிதீன்கள் ஆட்சியுடன் ஒப்பிட்டு நோக்கல்
3.2.3.3 ஏனைய அரசுகள்
- ஸ்பானிய உமையா ஆட்சி
- இந்திய மொகலாயராட்சி
- துருக்கிய உஸ்மானியராட்சி
3.2.3.4 தற்கால முஸ்லிம் உலகம்

3.3 **இஸ்லாமிய கலைகள்**
3.3.1 அறிவியல் கலைகள்
- அறிவியல் கலைகள் பற்றிய இஸ்லாமிய நோக்கு
- பின்வரும் கலைகளின் வளர்ச்சியும் ஆக்கப் பங்களிப்புக்களும் ; தத்துவம், மருத்துவம், வரலாறு, கணிதம், வானியல், புவியியல்
3.3.2 அழகியற் கலைகள்
- அழகியற் கலைகள் பற்றிய இஸ்லாமிய நோக்கு
- பின்வரும் கலைகளின் தோற்றமும் வளர்ச்சியும் (கிறாஅத் கலை, எழுத்தணிக் கலை, அறபெஸ்க், கட்டிடக்கலை, மினியேச்சர், இசைக்கலை)

3.4 **இஸ்லாமிய வரலாற்றில் மஸ்ஜித்களின் பங்களிப்பு**
- மஸ்ஜிதுகளின் தோற்றமும் பணிகளும்
- பின்வரும் மஸ்ஜிதுகளின் தோற்றமும், முக்கியத்துவமும் (மஸ்ஜிதுல் ஹரம், மஸ்ஜிதுல் நபவி, மஸ்ஜிதுல் அக்ஸா)

3.5 **இலங்கை முஸ்லிம்களின் வரலாறு**
3.5.1 அறபிகளின் வருகை
3.5.2 இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாதல்
3.5.3 இலங்கை முஸ்லிம்கள்
- குடிப் பரம்பலும் பழைய, புதிய குடியிருப்புக்களும்
- தேசிய பங்களிப்புக்கள்
3.5.4 சமய, சமூக அமைப்புகள்
- மஸ்ஜித்கள்
- முஸ்லிம் தனியார் சட்டம்
- வக்பு, விவாக முறிவு தொடர்பான சட்டங்கள்
- காழி மன்றமும், காழி மேன்முறையீட்டுச் சபையும்
- முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

3.6 **முஸ்லிம் வரலாற்று நாயகர்கள்**
3.6.1 ஸஹாபாக்கள்
(முஸ்அப் இப்னு உமைர் (ரழி), பிலால் (ரழி), ஸைத் இப்னு ஸாபித் (ரழி), துல்பிஜாதைன் (ரழி), உம்மு அமாரா (ரழி), அஸ்மா பிந்தி அபூபக்கர் (ரழி), பாத்திமா (ரழி)
3.6.2 தாபிஈன்கள் - இமாம்கள்
(உமர் இப்னு அப்துல் அஸீஸ், ஸஈத் இப்னு முஸையப், அதா இப்னு அபீ ரபாஹ், இமாம் ஸுஹ்ரி)
3.6.3 சிந்தனையாளர்கள் - சீர்திருத்தவாதிகள் : (அப்துல் காதிர் ஜீலானி, இமாம் கஸ்ஸாலி, அபுல் ஹஸன் சாதுலி, இப்னுல் கையூம் அல் ஜவ்ஸி, முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப், மௌலானா இல்யாஸ், இமாம் ஹஸனுல் பன்னா, மௌலானா மௌதூதி)

04. **சமூகவியலும் ஒழுக்கவியலும்**
4.1 **சமூகவியல்**
4.1.1 அறிமுகம்
- மனிதன், பிரபஞ்சம், வாழ்வு பற்றிய இஸ்லாமிய நோக்கு
4.1.2 தனி மனிதன்
- சமூகத்தில் தனி மனிதனின் பங்கு
- சமூகத்தை நோக்கிய தனிமனிதனின் கடமை

4.1.3 *குடும்பம்*
- தனி மனிதனும் குடும்பமும்
- முஸ்லிம் சமூக அமைப்பில் குடும்பத்தின் பங்கு
- தனி மனித உருவாக்கத்தில் குடும்பத்தின் பங்கும் பணியும்
- குடும்ப உறவு
- உறவினரும் அயலாரும்

4.1.4 *சமூகம்*
- இஸ்லாமிய சமூக அமைப்பின் பண்புகள் (சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம், நீதி)
- தனி மனிதனும் சமூகமும் (உரிமைகள்)
- நன்மைகளை வளர்த்தல் தீமைகளைக் களைதல்
- இஸ்லாமிய பயிற்றுனரின் பண்புகளும் பணிகளும்
- பல்லின சமூகத்துடனான முஸ்லிம்களின் உறவு
- நலிவுற்றோருக்கான பாதுகாப்பு
- தொழில் வழிகாட்டல்
- சமூக ஒழுக்கங்கள் (சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுத்தல், தவாஸுன், தலைமைத் துவத்திற்கு கட்டுப்படல், சமூகத் தொடர்பாடல்)
- சமூக உறவை வலுப்படுத்தக்கூடியனவும் சீர்குலைப்பனவும்

**4.2 ஒழுக்கங்கள்**

4.2.1 *இறைவனுடனான உறவு*
- இஹ்லாஸ்
- இறையச்சம் (தக்வா)
- தவக்குல்
- இறைத் தீர்ப்பை திருப்தியுடன் ஏற்றல்
- இறைவன் மீது அன்பு வைத்தல்
- நன்றியுணர்வு

4.2.2 *மனித உறவு தொடர்பான சமூக ஒழுக்கங்கள்*
- சகோதரத்துவம்
- வாய்மை
- நாணயம்
- மன்னிக்கும் மனப்பான்மை
- தூய்மை - சுத்தம்
- இரக்கம்
- வெட்கம்
- பொறுமை

4.2.3 *ஏனைய உயிரினங்கள், பௌதீக பொருட்கள் தொடர்பான ஒழுக்கங்கள்*
- உயிரினங்கள் மீது அன்பு செலுத்தலும் நலன் புரிதலும்
- பௌதீக சூழலை பாதுகாத்தல்
- நாட்டு நலன் பேணல்
- அனர்த்த முகாமைத்துவம்

**05. இஸ்லாமிய இலக்கியமும் அறபு மொழியும்**

**5.1 இஸ்லாமிய இலக்கியம்**
- இஸ்லாமிய இலக்கியத்தின் கொள்கைகளும் கோட்பாடுகளும்
- நவீன இஸ்லாமிய இலக்கியம் ஓர் அறிமுகம்

**5.2 பின்வருபவர்களின் இஸ்லாமிய இலக்கியப் பங்களிப்புக்கள் :-**

தமிழ் மொழி மூலம் -
- எம். ஸீ. சித்திலெப்பை
- கலாநிதி எம். எம். உவைஸ்
- ஏ. எம். ஏ. அஸீஸ்
- உமர் ஹஸ்ரத்
- யூ. எம். தாஸீம்
- கவிஞர் அப்துல் காதர் லெப்பை

சிங்கள மொழி மூலம் -
- கலாநிதி எம். எம். உவைஸ்
- எஸ். எம். மன்சூர்
- ஏ. எம். ஷாஹுல் ஹமீத்
- எம். எச். எம். ஷம்ஸ்
- எம். ஏ. முஹம்மத் மாஸ்டர் (திக்வெல்ல)
- மாத்தறை காஸிம் புலவர்

**5.3 அறபுத் தமிழ்**

5.3.1 *அறபுத் தமிழ் அறிமுகம்*
- அறபுத் தமிழ் தோற்றமும் வளர்ச்சியும்

5.3.2 *பின்வரும் ஆக்கங்கள் தொடர்பான அறிவு :*
- பத்ஹுத்தையான் - ஆலிமுல் அரூஸ்
- தப்ஸீர் - ஷெய்கு முஸ்தபா (பேருவலை)
- இப்னு நுபாதாவின் குத்பாக்கள்
- மீஸான் மாலை
- தலைப் பாத்திஹா
- தக்கரூத்

**5.4 அறபு மொழி**

5.4.1 *மொழித்திறன் விருத்தி*
- செவிமடுத்தல்
- உரையாடல்
- வாசித்தல்
- எழுதுதல்

5.4.2 *அன்றாட வாழ்வில் பயன்படுத்தக்கூடிய சொற்களும், சொற்றொடர்களும்*
- சிறு வாக்கியங்கள்

5.4.3 அறபியிலிருந்து தமிழ் அல்லது ஆங்கிலம் அல்லது சிங்களத்துக்கும் சிங்களம் அல்லது ஆங்கிலம் அல்லது தமிழிலிருந்து அறபிக்கும் மொழி பெயர்த்தல்

5.4.4 *தரப்பட்ட உரைப் பகுதியிலிருந்து வினாக்களுக்கு விடையளித்தல்*
- தரப்பட்ட உரைப் பகுதிக்கு உயிர்க் குறியீடுகள் வைத்தல்

5.4.5 *அல்குர்ஆன், ஸுன்னா இலக்கியங்களை நயத்தல்*
- முப்ரதாதுல் குர்ஆன்
- சந்தர்ப்பங் கூறல்

5.4.6 *அஹ்காமுத் தஜ்வீத் - தஜ்வீத் சட்டங்கள்*

5.4.7 இலக்கணம் தொடர்பான அறிவு

5.4.7.1 *அஸ்ஸர்பு*
- இறந்தகால, நிகழ்கால வினைகள்
- தன்மை, முன்னிலை, படர்க்கை வினைகள்
- ஆண்பால், பெண்பால், ஒருமை, பன்மை வேறுபாடுகள்
- ஏவல் வினை
- இறந்தகால, நிகழ்கால செயற்பாட்டு வினைகள்

- வினையடி (மஸ்தர்)
- இஸ்மு பாஇல், இஸ்மு மப்ஊல்
- பன்மை வடிவங்கள்

5.4.7.2 அந்நஹ்வு
- அல் முப்ததா, வல் கபர்
- அல் பிஅல் வல் பாஇல்
- அஸ்மாஉல் இஷாரா
- அஸ்ஸிபாத்
- ஹுரூபுல் ஜர்ரு
- அல் முழாப் வல் முழாப் இலைஹி
- கான வஅகவாதுஹா
- இன்ன வஅகவாதுஹா
- அல் ஹால்

9-172

---

## இளைஞர் அலுவல்கள் அமைச்சின் சிறுதொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவு

உதவிப் பணிப்பாளர் (திணைக்களம்சார்) பதவியினருக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை–2009

இளைஞர் அலுவல்கள் அமைச்சின்கீழ் இயங்கிவரும் சிறுதொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவில் பணி புரியும் உதவிப் பணிப்பாளர் (திணைக்களம்சார்) அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை ஒன்று இவ்வமைச்சின் பொருட்டு, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும். கீழே குறிப்பிட்ட அறிவித்தலுக்கு அமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2. பரீட்சை ஒழுங்குகள் :**

(அ) இப்பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதுடன், ஒவ்வொரு வினாத்தாளுக்குமான விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(ஆ) ஒவ்வொரு விடயத்திற்குமான மொத்தப் புள்ளிகள் 100 ஆவதுடன், ஒவ்வொரு விடயத்திலும் சித்தி எய்துவதற்கான ஆகக்குறைந்த புள்ளிகள் 40 ஆகும்.

(இ) இப்பரீட்சை சிங்கள மொழியில் மாத்திரமே இடம்பெறும்.

(ஈ) இப்பரீட்சைக்குரிய பாடங்கள் 2 ஆகும். ஒரு தடவையோ அல்லது பல தடவைகளிலோ தோற்றி சித்தியடைய முடியும்.

3. வினாத்தாள்களும் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஏற்புடைய பாடத்திட்டமும்.– முதலாம் வினாத்தாள் (காலம் : 3 மணித்தியாலங்கள்)

(1) பொது முகாமைத்துவம்-(விடய இலக்கம் 01) :

- ஒழுங்கமைப்பும் முகாமைத்துவமும்
- முகாமைத்துவ செயற்பாடுகளும் முகாமைத்துவ கருமங்களும்
- முகாமையாளர்களின் கருமங்கள்
- முகாமைத்துவ மட்டங்கள்
- கால முகாமைத்துவம்
- மனிதவள முகாமைத்துவம்

இரண்டாம் வினாத்தாள் (காலம் : 3 மணித்தியாலங்கள்)

(2) வியாபார முகாமைத்துவமும் அபிவிருத்தியும்– (விடய இலக்கம் 02) :

- தொழில் முயற்சியும் பொருளாதார வளர்ச்சியும்
- வியாபார முகாமைத்துவமும் அதனுடன் தொடர்புடைய விற்பனை, மனிதவள, நிதி மற்றும் செயற்பாடுகள் ஆகிய முகாமைத்துவத் துறைகள்
- வர்த்தகக் கோட்பாடுகளும் சமூகப் பொறுப்பும்
- சாத்தியக்கூற்றுக் கற்கையும் கருத்திட்ட அறிக்கைகள் தயாரித்தலும்

இந்த வினாப்பத்திரங்களுக்கு ஏற்புடைய பாடத்திட்டத்தின்கீழ் தயாரிக்கப்படும் வினாக்கள் கட்டுரை வடிவில் இருத்தல் வேண்டுமென்பதுடன், ஒரு வினாத்தாளுக்கு 6 (ஆறு) வினாக்கள் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும். அதில் 5 (ஐந்து) வினாக்களுக்கு மாத்திரம் விடை அளிக்கவும்.

**4. விண்ணப்பிக்கும் முறை**.– (அ) இவ் அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைய விண்ணப்பப் பத்திரங்களை ஏ4 அளவு கடதாசியில் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தில் தலைப்பு (1) முதல் (3) வரை முற்பக்கத்திலும், மீதியை 2 ஆம் பக்கத்திலும் உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். பூரணப்படுத்தும் தகவல்களை தமது சொந்தக் கையெழுத்திலேயே தெளிவாக நிரப்புதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரங்களைத் தயாரிக்கையில் அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் நிரப்புதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் மற்றும் பூரணமற்ற தகவல்களை வழங்கியுள்ள விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்பத்திரத்தின் நிழற்பிரதியொன்றை தங்களுடன் வைத்திருத்தல் பிரயோசனமாக இருக்கும். மேலும் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்பத்திரம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அப்படியிராத விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) பரீட்சைக்காக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்பத்திரங்கள் பதிவுத்தபால் மூலம் 2010.11.01 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும் :

"பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
இலங்கை பரீட்சைகள் திணைக்களம்
(ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை),
பெலவத்தை, பத்தரமுல்லை."

(இ) விண்ணப்பத்தை அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "உதவிப் பணிப்பாளர் (திணைக்களம்சார்) அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைநிலைப் பரீட்சை'' என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப் பத்திரத்தின் நிழற்பிரதியை தம்முடன் வைத்திருத்தல் பிரயோசன முடையதாகும்.

(ஈ) விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமை தொடர்பாக விண்ணப்ப தாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி

அட்டைகள் வழங்கப்பட்டதும் அது சம்பந்தமாக அறிவித்தல் உடனடியாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் செய்தித்தாள்கள் மூலம் வெளியிடப்படும். அவ்வாறான அறிவித்தல் குறித்து அறிந்துகொள்வதில் விழிப்பாக இருத்தல் வேண்டும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 தினங்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள், அறிவித்தலின் பிரகாரம் அதுபற்றி இலங்கை பரீட்சை திணைக்களத்திற்கு அறியத்தருதல் வேண்டும். தங்களுடன் வைத்திருந்த விண்ணப்பப்பத்திரத்தின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதி மற்றும் பதிவுத்தபால் பற்றுச்சீட்டும், கொழும்புக்கு வெளியே பிரதேசமொன்றெனின் அனுமதி அட்டையை அனுப்பிவைப்பதற்கான தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தை தங்களுடன் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறியத்தருதல் மிகவும் உசிதமாகும். அப்படியான அறிவித்தலை 4 (ஆ) பந்தியில் காட்டப்பட்டுள்ள முகவரிக்கே அனுப்பிவைத்தல் வேண்டும். (தந்தி அனுப்புவதற்கான முகவரி "பரீட்சை", பெலவத்தை, பத்தரமுல்லை).

5. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- (அ) விண்ணப்பங்களை அனுப்பிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டையை வழங்குதல், அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர் எனக் கருதுதல் ஆகாது. விண்ணப்பதாரர் ஒருவர் தமக்கு வழங்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை நிலையத்தின் மேற்பார்வையாளருக்கு கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்க முடியாத பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. பரீட்சார்த்திகள் பின்பற்றவேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும் வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது பரீட்சைக்குத் தோற்றுவதற்கான எல்லாத் தகைமைகளையும் அவர் பெற்றுள்ளார் எனக் கருதுதல் ஆகாது. பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அமுல்படுத்தப்படும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கு, பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் உட்பட்டவர்களாவர். அவ்வாறான சட்ட ஒழுங்குவிதிகளை மீறின் பரீட்சை ஆணையாளரினால் வழங்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும்.

(ஆ) பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்.- தான் தோற்றும் அனைத்து விடயங்கள் தொடர்பாக பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடியவாறு எல்லாப் பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதன் பொருட்டு பின்வரும் ஆளடையாள பத்திரங்களில் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் பிரயாணக் கடவுச்சீட்டு.

எஸ். எஸ். ஹேவாபத்திரன,
செயலாளர்,
இளைஞர் அலுவல்கள் அமைச்சு.

"நிபுணத்தா பியச" இளைஞர் அலுவல்கள் அமைச்சு,
எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 5.
2010, ...........................

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**இளைஞர் அலுவல்கள் அமைச்சு**

சிறுதொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவு உதவிப் பணிப்பாளர் (திணைக்களம்சார்) நியமனதாரர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2009

EFFICIENCY BAR EXAMINATION FOR ASSISTANT DIRECTOR (DEPARTMENTAL) OFFICERS - 2009

1. பெயர் :

1.1 முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில தனி எழுத்துக்களில்) உதாரணம் : SILVA, G. A.) :----.

1.2 முழுப் பெயர் (ஆங்கில தனி எழுத்துக்களில்) :----.

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. 2.1 அலுவலக முகவரி (ஆங்கில தனி எழுத்துக்களில்) :----. இம்முகவரிக்கு அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படும்.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2.4 பால் (பெண் /ஆண்) :
(பெண்-1, ஆண்-0) ☐
(பொருத்தமான இலக்கத்தை கூட்டில் இடவும்.)

3. பரீட்சைக்குத் தோற்றும் பாடங்கள் :

1. .................................................. விடய இலக்கம் ☐

2. .................................................. விடய இலக்கம் ☐

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என உறுதிமொழிகிறேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அமுல்படுத்தப்படும் சட்ட ஒழுங்கு விதிகளுக்குக் கீழ்ப்படிவதாகவும் நான் உறுதியளிக்கிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பத்தை அனுப்பும் திரு./ திருமதி/ செல்வி ................................ என் முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் அவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும் சம்பந்தப்பட்ட வினைத்திறன்காண் தடைநிலைப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவர் தகைமையுடையவர் எனவும் சான்றுப் படுத்துகிறேன்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

10-214

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

**12. ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2010 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத் திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.***– *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

***அட்டவணை - 2010***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 01.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.09.2010 |
| | | வெள்ளி | 08.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.09.2010 |
| | | வெள்ளி | 15.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.10.2010 |
| | | வியாழன் | 21.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.10.2010 |
| | | வெள்ளி | 29.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.10.2010 |
| **நவெம்பர்** | .. | வியாழன் | 04.11.2010 | .. | நண்பகல் 12 | வியாழன் | 21.10.2010 |
| | | வெள்ளி | 12.11.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.10.2010 |
| | | வெள்ளி | 19.11.2010 | .. | நண்பகல் 12 | வியாழன் | 04.11.2010 |
| | | வெள்ளி | 26.11.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.11.2010 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 03.12.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.11.2010 |
| | | வெள்ளி | 10.12.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.11.2010 |
| | | வெள்ளி | 17.12.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.12.2010 |
| | | வெள்ளி | 24.12.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.12.2010 |
| | | வெள்ளி | 31.12.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.12.2010 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*